# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 8,548 — 1939 ம் ௵ கார்த்திகைமீ 10 ந் திகதி, வெள்ளிக்கிழமை.


## Part IV.—நான்காம் பாகம்.

---

### அரசாட்சியாரின் விளம்பரம்.

**L. D.—B 269/31**

*ஸ்தல யாத்திரைகளைப் பற்றிய சட்டம்.*

*கதிர்காம இல்மகாகச்சித் (திருக்கார்த்திகைத்) திருவிழாப் பிரமாணங்கள்.*

" ஸ்தல யாத்திரைகளைப்பற்றிய ஒரு சட்டம் " (அத்தியாயம் 133) என்னும் மகுடா நாம்முடைய சட்டத்தின் 2 ம் பிரிவின் கீழ் நான் பெற்ற அதிகாரத்தைக்கொண்டு, இலங்கை அரசாங்கத்தை நடத்தும் அதிகாரனாகிய மக்ஸ்வெல் மக்லகன் வெதபேன் ஆகிய நான், வழக்கம்போல் 1939 ம் ஆண்டு (நொவெம்பர்) கார்த்திகை மாசத்தில் தொடங்கி நடக்கும் இல்மகாகச்சித் திருவிழாவை எதிர்நோக்கி, இந்த விளம்பரத்தினால் கீழ்காட்டப்படும் பிரமாணங்களை ஆக்குகின்றேன்.

எம். எம். வெடபேன்,
இலங்கை அரசாங்கத்தை நடத்தும் அதிகாரி.

கொழும்பு, 1939 ம் ஆண்டு கார்த்திகைமீ 2 ந் வ.

*பிரமாணங்கள்.*

1. இப்பிரமாணங்களில், " பாடி எல்லை " என்பது பின்வரும் எல்லைக்குள் உள்ள இடங்களைத் தன்னுள் அடக்கும் :—

(அ) கதிர்காம மகா தேவாலயத்திலிருந்து அரை மைல் சுற்றளவிற்குள் உள்ள இடங்களையும்,

(ஆ) செல்லக் கதிர்காமப் பிள்ளையார் கோவிலிலிருந்து கால் மைல் சுற்றளவிற்குள் உள்ள இடங்களையும் ஆகும்.

2. (அ) 1939 ம் ஆண்டு இல்மகாகச்சித் திருவிழா நடக்கும் நாட்களும், யாத்திரிகர் கதிர்காமத்தில் தங்கிநிற்கும் நாட்களும் நொவெம்பர்மீ 25 ந் திகதி தொடங்கி 27 ந் திகதி வரையுள்ள இவ்விரண்டு நாட்களுமுட்பட உள்ள மூன்று நாட்கள் மாத்திரமே.

(ஆ) ஒரு யாத்திரிகனுவ்து நொவெம்பர் மாசம் 25ம் நாளுக்குமுன் பாடி எல்லைக்குள் வந்துசேரக்கூடாது. 27 ம் நாளுக்குப்பின் அவ்வெல்லைக்குள் தங்கி நிற்கக்கூடாது.

3. பாடிஎல்லை பொதுவாக ஊவா மாகாண அரசாங்க ஏஜண்டரின் அதிகாரத்துள்ளும் " மேற்பார்வையாளர் " என்று பெயர் பெற்று நியமிக்கப்பெறும் உத்தியோகத்தரதும், அவருக்குதவிபுரியும் வைத்தியரும், பாடிக்காவலுக்குரிய பொலீஸ் தலைவரும் ஆகியவர்களதும் நேர் அதிகாரத்தின்கீழும் இருக்கும்.

4. (1) மேற்பார்வையாளர் கதிர்காமத்திற்குப்போகும் பயண வழியிலும் திரும்பிவரும் பயணவழியிலும் அதிகாரஞ் செலுத்திப் பின்வருவனவற்றைச் செய்ய உரிமையுடையர் :—

(அ) தான் குறிப்பிட்ட இடங்களை மாத்திரமே கழுவவும், நீராடவும், குடிக்கத் தண்ணீர் எடுக்கவும், மலசலங்கழிக்கவும் உபயோகிக்கலாமென்று இடம் நியமனஞ்செய்யவும்.

(ஆ) ஒவ்வொரு வகுப்பிலுமுள்ள யாத்திரிகருந் தங்க வெவ்வேறிடம் நியமிக்கவும்.

(இ) எக்கூட்ட யாத்திரிகராயினும் போவதற்கு வழிநியமித்து அவ்வழியாற் போகச்செய்யவும்.

(ஈ) யாத்திரிகருக்குக் கொடுக்கப்படும் ஊண் பகிரப்படுத்தலைப் பார்த்து நடத்தவும்.

(உ) நோய் அடையும் யாத்திரிகர் தங்கத் தனியிடங்களை நியமிக்கவும், மற்றவர்கள் அவர்களுடன் கலவாது தடுக்கவும், பயணஞ் செய்யத் தகாதவர்களாய் அந்நோயாளிகளிருந்தால் தடுத்து வைத்திருக்கவும் (உரிமையுடையர்).

(2) ஒரு ஆளாவது மேற்பார்வையாளர் மேலே (1) இலக்கமிடப்பட்ட பிரமாணத்தில் குறிக்கப்பட்ட விஷயங்களுக்கு இடும் நீதியான கட்டளையை மீறக்கூடாது.

5. யாராயினும் பாடியெல்லைக்குள், அரசாட்சி ஏஜண்டரால் அல்லது அவருடைய உத்தரவுடன் இத்தேவைக்கென்று அமைக்கப்பட்ட இடத்திலன்றி வேறிடத்தில் மலசலங்கழிக்கக்கூடாது.

6. யாராயினும் திரவமானவோ அல்லது கெட்டியானவோ எவ்விதமான கழிவு பொருளையும் பாடியெல்லைக்குட்பட்ட இடங்களில் இதற்கென்று அரசாட்சி ஏஜண்டரால் அமைக்கப்பட்ட அல்லது அவருடைய உத்தரவுடன் அமைத்த இடம் அல்லது கலத்திலன்றிப் போடக்கூடாது.

7. யாராயினும், பாடியெல்லைக்குட்பட்ட இடத்தில் மேற்பார்வையாளராற் கட்டளையிடப்பட்ட தலத்திற்கு மேலே, கங்கையில் குளிக்கவாவது இறங்கவாவது கூடாது.

8. மாடுகளை அல்லது வண்டி மாடுகளை மேற்பார்வையாளர் அல்லது அவராற் கட்டளைபெற்ற இன்னொருவர் கொடுத்த உத்தரவுச் சீட்டில்லாமல் பாடியெல்லையிலிருந்து காற் கட்டைக்குள் கொண்டுவரக்கூடாது.

9. 8 ம் பிரமாணத்தின்கீழ் கொடுக்கும் ஒவ்வொரு உத்தரவுச் சீட்டும், பாடியின் சுகாதாரத்தையும் சனங்களின் சுகத்தையும் காப்பாற்றும் விஷயமாகவும், பாடி யெல்லைக்குள் போக்குவரவை அடக்கி நடத்தும் விஷயமாகவும் மேற்பார்வையாளரால் இடப்படும் விதிவிலக்குகளுக்குட்படும்.

10. அரசாட்சி ஏஜண்டரிடமிருந்து இதற்கென்று உத்தரவுச்சீட்டுப் பெற்றாலல்லது, ரொட்டி சுடும் கடையாவது, சோடாச் செய்யும் தொழிற்சாலையாவது, தேநீர் அல்லது கோப்பிநீர்க் கடையாவது, சாப்பாட்டுக் கடையாவது, காலையாவது பாடியெல்லைக்குள் அமைக்கக்கூடாது. உத்தரவுச் சீட்டுப் பணமின்றி இனமாகக் கிடைக்கும்.

**11.** (1) எவ்விதமாகவாவது விபரிக்கக்கூடிய எப்பொருளையாவது பாடியெல்லைக்குள் மேற்பார்வையாளரால் இதற்கென்று நியமிக்கப் படாத இடத்தில் விற்பனைக்கு வைத்திருக்கக்கூடாது.

(2) மேற்பார்வையாளர் அல்லது வைத்திய உத்தியோகத்தர் சுகத்திற் கேற்காதென்று விலக்கிய, அல்லது இவர்களில்லாத நேரம் பொலீஸ் தலைவர் விலக்கிய உணவுப்பண்டத்தை யாரும் விற்கக்கூடாது.

(3) மேற்பார்வையாளர் அல்லது வைத்தியர் அல்லது இவர்களில்லா நேரம் பொலீஸ் தலைவர் உண்ண ஏற்காதென்று தள்ளும் உணவு பொருளை பறித்து அழிவுசெய்வது எந்தப் பொலீஸ் வேலைகாரருக்கோ அல்லது சுகாதார சோதனைகாரருக்கோ நீதிக்குட்பட்ட செய்கையாகும்.

**12.** (1) எல்லாச் சாப்பாட்டுக் கடைகளும், தேநீர், கோப்பிநீர்க் கடைகளும் சுத்தமாகவும் சுகாதாரத்துக்கேற்ற முறையிலும் இருக்க வேண்டும்.

(2) எல்லா பலகாரங்கள், இனிப்புப்பண்டங்கள், சமைத்த உணவுப் பொருட்கள், விற்பனைக்கென்று வெளியில் வைப்பன, தகுதியாயமைத்த ஈ நுழையாத கண்ணாடிப் பெட்டிகளில் வைத்திருக்கவேண்டும்.

(3) கழிவு தேயிலையோ, கோப்பியோ, பாலோ, உணவுக்கழிவோ சமையற்கழிபொருளோ அல்லது வேறெவ்வித கழிவுபொருளோ நிலத்தில் எறியக்கூடாது. இவ்வித எல்லாக் கழிவு பொருட்களும் கீழ் விபரிக்கும் விதமான கொள்கலத்தில் (பெட்டியில்) சேர்த்துவைத்து எந்த நேரத்திலும் சுகாதாரப் பகுதியாரால் அப்புறப்படுத்தப்பட ஆயத்த மாயிருக்க வேண்டும்.

(4) விற்பனைக்கோ, அல்லது வியாபாரஞ்செய்வதற்கோ உபயோகிக்கப் படும் ஒவ்வொரு கட்டடமும், கொட்டிலும், இடமும் லோகத்தால் அல்லது மரத்தால் செய்யப்பட்டு 4½ கனஅடிக்குமேல் உள்ளிடமுள்ள ஊத்தைக் கொள்கலமுடையதாயிருக்க வேண்டும். இந்தக் கட்டடம், கொட்டில், அல்லது இடத்தில் சேரும் கழிவு பொருட்கள் சொல்லப்பட்ட ஊத்தைக் கொள்கலத்தில் இடப்பட்டு, ஊத்தைப் பொருள் உள்போட அல்லது வெளியில் எடுக்கத் திறக்கும் நேரமல்லா மற்று நேரமெல்லாம், லோகம் அல்லது மரமூடியால் மூடப்பட்டிருக்க வேண்டும்.

**13.** எவ்வித தொற்றும், அல்லது பரவும் வியாதியுடைய யாரை யாவது பாடி எல்லைக்குள் ஒருவரும் அழைத்துவரக்கூடாது, அல்லது பாடி எல்லைக்குள் நுழைய உதவிசெய்யவோ நுழையும்போது ஒத் துழைக்கவோ கூடாது.

**14.** திருவிழா காலத்தில், பாடியிடத்தில் எதும் தொற்று நோய் உண்டுபடின், அரசாட்சி ஏஜன்டர் யாத்திரையாளரை பாடியிடத்தி லிருந்து விலகும்படி கட்டளையிடவும் விலகி வெளிப்போகும் வழியைக் குறித்துக்காட்டவும், திரும்பிப்போக உபயோகிக்கும் வாகனத்தையும், போகும் முறையையும் குறிப்பிட்டுக் கட்டுப்படுத்தவும் நீதிக்குட்பட்ட அதிகாரமுடையர்.

**15.** பாடியிடத்தில் இருப்பவர்களில் தொற்றும் அல்லது பரவும் நோய் உண்டாகும் ஒவ்வொருவரும் அன்றியும் தொற்றும் அல்லது பரவும் நோயுள்ளவரென்று அறியப்பட்ட ஒருவருடன் கூட இருந்த ஒவ்வொருவரும் இதனைப் பாடித் தலைவராயுள்ள வைத்திய உத்தியோ கத்தருக் கறிவிக்கக் கடமைப்பட்டவராவர்.

**16.** அரசாங்க ஏஜண்டருடைய முன்னுத்தரவின்றி பாடி எல்லைக்குள் தெருவாகப் பாவிக்கப்பட்டோ அல்லது தெருவிற்கென்று ஒத்திவைக்கப் பட்டோ இருக்கும் நிலத்தில் யாராவது கடை கட்டவோ அல்லது அந் நிலத்தின் பகுதி சேரக் கட்டடத்தைப் பருப்பித்துக் கட்டவோ கூடாது.

---

## காணி நிர்ணய முன்னறிவித்தல்களைக் குறித்த விளம்பரங்கள்.

காணியுரிமை நிர்ணயச் சட்டம்.

காணியுரிமை நிர்ணய விஷய அறிவித்தல்.
இலக்கம் 2,117 (கண்டி)

இதனோடிணைத்திருக்கும் அட்டவணையில் விவரித்துள்ள காணிகளில் எதற்கேனும் அதன் எப்பங்குக்கேனும் அதில் எச்சோந்தைக்கேனும் தமக்கு உரித்துண்டென்று 1939 ம் ஹூ (நவம்பர்) கார்த்திகைமீ 10 ந் தேதியிலிருந்து மூன்று மாச காலத்திற்குள் இதனடியிற் கையொப்ப மிட்டவருக்கு ஒருவரும் அறிவியாதிருக்குமிடத்து காணி யுரிமை நிர்ணயச் சட்டத்தின் 5 (1) ம் பிரிவின்படி அக்காணியை முடிக்குரிய காணியென வெளிப்படுத்தி முடிக்குரிய காணியாக அதன் விஷயத்திற் செய்யவேண்டி யன்செய்து முடிக்கப்படுமென்று மேற்சொல்லிய சட்டத்தின் 4 ம் பிரிவின் படி இதனால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

1939 ம் ஹூ (ஒக்றோபர்) ஐப்பசிமீ 19 ந் தேதியிலன்று கண்டிக் கச்சேரியில் கொடுக்கப்பட்டது.

பி. எம். றெனிசன்,
உதவி அரசாட்சி ஏஜன்ற், கண்டி.

குறிப்பு.—(*a*) இக்காணிகளைப்பற்றிய இன்னும் மேலதிகமான விபரம் மத்திய மாகாண அரசாட்சி ஏஜண்டரிடமும் அவைகளின் அளவைப் படங்கள் (சர்வேயர் ஜெனறல்) நில அளவைக் காரியகரித்தர்டமும் பெற்று கொள்ளலாம்.

(*b*) இக்காணிக ளெவற்றிலேனுமுள்ள வழியுரித்து அக்காணிகளுக் குள்ள உரித்தாமென்பதை அறிந்துகொள்க.

இடாப்பு.

மத்திய மாகாணம், கண்டி டிஸ்திறிக், பாத்தஹேவாஹெற்றப் பகுதியில் கண்டகஹாக் கோறளை தெற்கின் தெல்தோட்டக் கிராமத்திலிருக்கும் பின் வருங் காணித்துண்டுகள் :—

I.—பிரதமபடம் இல : A 75.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|
| 1 | திக்கின்னப்பத்தன, (பெரிய றோட்டுஅருகுச் சேமிப்பு நிலம்) | 0 | 0 | 9 |
| 2 | ஷை ( ஷை ) | 0 | 1 | 9 |
| 3 | ஷை ( ஷை ) | 0 | 1 | 36 |
| 4 | ஷை .. — .. | 11 | 2 | 11 |
| 5 | குறிகொல்லவத்தை, (பெரிய றோட்டருகுச் சேமிப்பு நிலம்) | 0 | 0 | 5 |
| 6 | ஷை ( ஷை ) | 0 | 0 | 6 |
| 7 | ஷை .. — .. | 0 | 0 | 27 |
| 8 | ஷை .. — .. | 0 | 1 | 29 |
| 9 | குறிகொல்லவத்தை, (பெரிய றோட்டருகுச் சேமிப்பு நிலம்) | 0 | 0 | 20 |
| 10 | ஷை ( ஷை ) | 0 | 0 | 4 |
| 11 | ஷை ( ஷை ) | 0 | 0 | 5 |
| 12 | ஷை ( ஷை ) | 0 | 1 | 13 |
| 14 | தெக்கின்னபத்தன .. .. | 0 | 2 | 2 |

பிரதமபடத்து இல : 6,450.

| | | | | |
|---|---|---|---|---|
| 1668½ | திக்கின்ன, பகிரங்க வேலைக்கந்தோர் வேலையாட்களின் விடுதிகள் .. .. | 0 | 2 | 32 |
| 1668A | திக்கின்னப்பத்தன .. .. | 1 | 2 | 35 |
| 1668B[1] | ஷை .. .. .. | 0 | 1 | 25 |
| 1668B | ஷை .. .. .. | 0 | 2 | 24 |
| 1668 | ஷை .. .. .. | 6 | 3 | 12 |
| 1670 | திக்கின்ன, றோட்டுக்காகச் சேமிப்பு நிலம்) .. | 0 | 3 | 14 |
| 1671 | கிரிகொல்லவத்தை .. .. | 0 | 0 | 31 |
| 1673 | ஷை .. .. .. | 0 | 0 | 37 |

பிரதமபடம் இல : A 463.

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | கெற்றகொடவத்தை அல்லது றிங்கலகெலவத்தை, (றோட்டுக்காகச் சேமிப்பு நிலம்) .. | 0 | 0 | 2·5 |
| 2 | ஷை ( ஷை ) .. | 0 | 0 | 2·8 |
| 3 | ஷை ( ஷை ) .. | 0 | 0 | 5 |
| 4 | திக்கேனவத்தை, (றோட்டுக்கும் பாதைக்குமாகச் சேமிப்பு நிலம்) .. | 0 | 0 | 10·6 |
| 5 | திக்கேனவத்தை, (பாதையருகுச் சேமிப்பு நிலம்) .. | 0 | 0 | 21·7 |
| 6 | திக்கேன, ( ஷை ) .. | 0 | 0 | 1·3 |
| 7 | ஷை ( ஷை ) .. | 0 | 0 | 1·8 |
| 8 | ஷை ( ஷை ) .. | 0 | 0 | 0·1 |
| 9 | ஷை ( ஷை ) .. | 0 | 0 | 2·1 |
| 10 | ஷை ( ஷை ) .. | 0 | 0 | 11·2 |
| 11 | திக்கேனவத்தை ( ஷை ) .. | 0 | 0 | 10 |
| 12 | திக்ஹேன, (றோட்டருகுச் சேமிப்பு நிலம்) .. | 0 | 1 | 26·7 |

எல்லைகள் : வடக்கு-உறுதிப்படம் 52,165; திக்ஹேன (6,450 ம் பிரதம படம், காணியிலக்கம் 1,667, உறுதிப்படம் 334,143) ; 52,157, 116,608, 116,612 ஆகிய உறுதிப்படங்களிற் கண்டிருக்குங் காணிகள்) ; கிழக்கு-93,020, 93,702, 83,150 ஆகிய உறுதிப்படங்களிற் கண்டிருக்குங் காணி கள், குறிகொல்லேவத்தை (பிரதமப் படம் 6,450, காணியிலக்கம் 1,672, உறுதிப்படம்-334,142), 83,151, 52,164, 52,160 முதலிய உறுதிப்படங் களிற் கண்டிருக்குங் காணிகள், கண்டி-தெல்தொட்டப் பெரிய பாதை ; தெற்கு-49,943 ம் உறுதிப்படத்திற் கண்டிருக்கும் காணி, வேத எஸ்ற் றேற்த் தோட்டம் (தோட்டப் பாதையின் பாகம்) (பிதரமபடம் A 75 இல் 13 ம் கண்டம்); மேற்கு-52,166 ம் உறுதிப்படத்திற் கண்டிருக்குங் காணி, திக்ஹேன, (உறுதிப்படம் 333,822, பிரதமப்படம் 6,636 கண்டம் 7), திக்ஹேன (உறுதிப்படம் 349,224, பிரதமப்படம் 6,636, கண்டம் 5), றிங்கலக்கெலேவத்தை அல்லது றிங்கன்னக்கெலவத்தை, (உறுதிப்படம் 334,491, பிரதமப்படம் 6,636, கண்டம் 2).

இவ்வெல்லைக்குட்படிட்ருக்கும் கண்டி-புசல்லாவை றோட்டும் தெல் தோட்டை வேத எஸ்றேற் தோட்ட றோட்டுந் தவிர.

II.—பிரதமபடம் : 6,636.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|
| 3 | றிங்கன்னகெலவத்தை அல்லது கற்றக்கொடபத்தன (ஆற்றுக்காகச் சேமிப்பு நிலம்) .. | 0 | 0 | 6 |
| 4 | திக்ஹேன ஷை .. .. | 0 | 3 | 20 |

எல்லைகள் : வடக்கு-92,995 ம் உறுதிப்படத்திற் சொல்லிய காணி ; கிழக்கு-றிங்கலக்கெலவத்தை அல்லது றிங்கன்னங்கெலவத்தை. (உறுதிப் படம் 334,491, பிரதமபடம் 6,636, கண்டம் 2), திக்ஹேன (உறுதிப் படம் 349,224, பிரதமபடம் 6,636, கண்டம் 5) ; தெற்கு-52,166 ம் உறுதிப்படத்திற் கண்டிருக்குங் காணி ; மேற்கு-றிங்கன்கெலக்கந்துற.

காணியுரிமை நிர்ணயச் சட்டம்.

காணியுரிமை நிர்ணய விஷய அறிவித்தல்.

இலக்கம் 2,118 (யாழ்ப்பாணம்).

இதனோடிணைத்திருக்கும் அட்டவணையில் விவரித்துள்ள காணிகளில் ஏதற்கேனும் அதன் எப்பங்குக்கேனும் அதில் எச்சோந்தைக்கேனும் தமக்கு உரித்துண்டென்று 1939 ம் ஹு (நவம்பர்) கார்த்திகைமீ 10 ந் தேதியிலிருந்து மூன்று மாச காலத்திற்குள் இதனடியிற் கையொப்ப மிட்டவருக்கு ஒருவரும் அறிவியாதிருக்குமிடத்து காணியுரிமை நிர்ணயச் சட்டத்தின் (319 ம் அதிகாரம்) 5 (1) ம் பிரிவின்படி அக்காணியை முடிக்குரிய காணியென் வெளிப்படுத்தி முடிக்குரிய காணியாக அதன் விஷயத்திற் செய்யவேண்டியன செய்து முடிக்கப்படுமென்று மேற்சொல்லிய சட்டத்தின் 4 ம் பிரிவின்படி இதனுல் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

1939 ம் ஹு (மார்ச்சு) பங்குனிமீ 31 ந் தேதி வெளிவந்த " கசெற் " பத்திரிகையில் பிரசிரிக்கப்பட்ட 1959 ம் (யாழ்ப்பாணம்) இலக்கக் காணியுரிமை நிர்ணய விஷய அறிவித்தல் இதனுல் ரத்துச்செய்யப்படுகின்றது.

1939 ம் ஹு (ஒக்றரேபர்) ஐப்பசிமீ 17 ந் தேதியிலன்று யாழ்ப்பாணக் கச்சேரியில் கொடுக்கப்பட்டது.

ஆர். பீ. நெயிஷ்,
வடமாகாண அரசாட்சி ஏஜன்றர்.

குறிப்பு.—(*a*) இக்காணிகளைப்பற்றிய இன்னும் மேலதிகமான விபரம் வடகாமாண அரசாட்சி ஏசண்டரவர்களிடமும் அவைகளின் அளவை படங்கள் (சர்வேயர் ஜெனறல்) நில அளவைக் காரியகர்த்தரிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

(*b*) இக்காணிக ளெவற்றிலேனுமுள்ள வழியுரித்து அவ்வக்காணிகளுக்குள்ள உரித்தாமென்பதை அறிந்துகொள்க.

அட்டவணை.

வடமாகாண, யாழ்ப்பாண டிஸ்திறிக் தீவுப்பிரிவு, புங்குடுதீவு மேற்குக் கிராமத்திலுள்ள கீழே சொல்லப்படும் காணித்துண்டுகள் :—

பிரதமபடம் இல : A 1,241.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விலாசம். ஏ. றூ. ப. |
|---|---|---|
| 2 | மணற்காடு .. .. .. | 2 0 38·2 |
| 3 | மணற்காடு .. .. .. | 0 3 31·2 |

எல்லைகள் : வடக்கு-எம். தருமலிங்கமும் மறுபெயர்களும் உரித்துக் கூறும் மணற்காடு என்னும் காணித்துண்டு (A1,241 பிரதம படத்தின் 1 ம் இலக்கக் காணித்துண்டு) ; கிழக்கு-எம். சுப்பிரமணியமும் மறுபெயர்களும் உரித்துக்கூறும் மணற்காடு என்னும் காணித்துண்டு ; தெற்கு-முடிக்குரிய மணற்காட்டுச்சுடலை அல்லது கடற்கரைத் தரவையும் சுடலையும் ; மேற்கு-சாயப்பனையடிபுங்கன்காடென்னும் பனந்தோட்டமும் 8,151 ம் இலக்க பிரதமபடத்திலுள்ள 1 ம் இலக்கக் காணித்துண்டு 424,607 ம் இலக்க உரிமைப்படம்) நாகநாதன் பெண் செங்கமலமும் மறுபெயர்களும் உரித்துக்கூறும் சாயப்பனையடி புங்கன்காடென்னும் பனந்தோட்டம்.

---

காணியுரிமை நிர்ணயச் சட்டம்.

காணியிரிமை நிர்ணய விஷய அறிவித்தல்

நம்பர் 2,119 (கேகாலை).

இதனோடிணைத்திருக்கும் அட்டவணையில் விவரித்துள்ள காணிக்கேனும் அச்சொல்லப்பட்ட காணியின் எப்பங்குக்கேனும் அதில் எச்சோந்தைக்கேனும் தமக்கு உரித்துண்டென்று 1939 ம் ஹு (நவம்பர்) கார்த்திகைமீ 10 ந் தேதியிலிருந்து மூன்றுமாச காலத்திற்குள் இதனடியிற் கையொப்பமிட்டவருக்கு ஒருவரும் அறிவியாதிருக்குமிடத்து காணியுரிமை நிர்ணயச் சட்டத்தின் 5 (1) ம் பிரிவின்படி அச்சொல்லப்பட்ட காணியை முடிக்குரிய காணியென வெளிப்படுத்தி முடிக்குரிய காணியாக அதன் விஷயத்திற் செய்யவேண்டியன் செய்து முடிக்கப்படுமென்று மேற் சொல்லிய சட்டத்தின் 4 ம் பிரிவின்படி இதனுல் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

1939 ம் ஹு (ஒக்றரேபர்) ஐப்பசிமீ 11 ந் தேதியிலன்று கேகாலைக் கச்சேரியில் கொடுக்கப்பட்டது.

ஆர். அலுவிஹாரே,
உதவி அரசாட்சி ஏஜன்ற்.

குறிப்பு.—(*a*) இச்சொல்லப்பட்ட காணியைப்பற்றிய இன்னும் மேலதிகமான விபரத்தைக் கேகாலை உதவி அரசாட்சி ஏஜன்று அவர்களிடமும் இச்சொல்லப்பட்ட காணியின் அளவைப்படங்கள் (சர்வேயர் ஜெனறல்) நில அளவைக் காரியகர்த்தரிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

(*b*) சொல்லப்பட்ட காணியிலுள்ள வழியுரித்து சொல்லப்பட்ட காணிக்குள்ள உரித்தாமென்பதை அறிந்துகொள்க.

அட்டவணை.

சப்பிரகாமுவ மாகாணம், கேகாலை டிஸ்திறிக், பெலிகல் கோறளை, ஓதறபத்துவ, கெலியகொட கிராமத்திலிருக்கும் துண்டுக்காணியாவது :—

பிரதமப்படம் A 231.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|
| 1 | டியுலகலபல்லேகலேமுக்கலான .. .. | 4 2 37 |

எல்லைகளாவன : வடக்கு-வீ. எம். பாலப்பு உரித்தாடும் பிஹிம்பியே வத்த ; கிழக்கு-கலுகலபஹல மெற்றியகஹனே கிராமங்களின் எல்லைகள் ; தெற்கு-மெற்றியகஹனே கிராமத்தின் எல்லையும், வீ. எம். ஜோத்திஹாமியும் இன்னொருவரும் உரித்தாடும் டெல்கஹமுலவத்த ; மேற்கு-வீ. எல். ஜோத்திஹாமியும் இன்னொருவரும் உரித்தாடும் டெல்கஹமுலவத்தவும் ஜீ. சலஞ்சிய உரித்தாடும் வெலகாவபறனவத்தவும்.

---

## அரசாட்சியாரின் தேள்வைக்காகிய காணி விளம்பரங்கள்.

நாவலப்பிட்டியிலிருந்து கறஹண்டுங்கலவுக்குப்போகும் றோட்டு என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இல : A 392. குறிச்சி—பெனித்துடுமுல்லவும், கறஹண்டுங்கலவும்.

| துண்டு. | காணியின் பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | மலியட்டேகும்புற, 20 ம் வரி இலக்க வட்டாரத்தின் பகுதி .. | வயல்நிலம் (விடப்பட்டது) | எச். ஓ. லெவ்வை, நாவலப்பிட்டி .. | 0 0 15·83 |
| 2 | பிற்றக்கொட்டுவேவத்தை, 30, 32ம் வரி இலக்க வட்டாரத்தின் பகுதி | பாழ்நிலம் .. | ரீ. யூ. எம். தம்பி, நாவலப்பிட்டி .. | 0 0 3·44 |
| 3 | வட்டகொடவத்தை, 25–28 ம் வரியிலக்க வட்டாரத்தின் பகுதி | ஷை .. | எம். பால்கிஸ் உம்மா. நாவலப்பிட்டி | 0 0 3·11 |
| 4 | பிற்றக்கொட்டுவேவத்தை, 30–32 ம் வரியிலக்க வட்டாரத்தின் பகுதி | தோட்டம் .. | ரீ. யூ. எம். தம்பி, நாவலப்பிட்டி .. | 0 0 8·41 |
| 5 | ஷை .. .. .. | ஷை .. | ஷை .. .. | 0 0 0·31 |
| 6 | லெயிங்கொமுவேவத்தை, 34 ம் வரியில்க்க வட்டாரத்தின் பகுதி | ஷை .. | ஏ. நூர்டீன், ஏ. அஹமதுலெவ்வை, ஏ. அப்டுல் ஹமீத், ஏ. மொகம்மது காசிம் எல்லோரும் நாவலப்பிட்டி | 0 0 8·26 |
| 7 | லேயங்கொமுவேவத்தை, 35 ம் வரியிலக்க வட்டாரப்பகுதி .. | பாழ்நிலம் .. | ஆசியா உம்மா, நாவலப்பிட்டி .. | 0 0 1 |
| 8 | பிற்றக்கொட்டுவேவெவ, 30–32 ம் வரியிலக்க வட்டாரப்பகுதி | ஷை .. | ரீ. யூ. எம். தம்பி, நாவலப்பிட்டி .. | 0 0 0·94 |
| 9 | வட்டகொடகெதறஹேன, 40 ம் வரியிலக்க வட்டாரப்பகுதி .. | வயல்நிலம், (விடப்பட்டது) | ஷை .. .. | 0 0 7·79 |
| 11 | வெவலன்டகெதறஹேன, 37 ம் வரியிலக்க வட்டாரத்தின் பகுதி | ஷை .. | சபுருஞச்சி, நாவலப்பிட்டி .. | 0 0 9·20 |
| 12 | பந்தேனியா, 10 ம் வரியிலக்க வட்டாரத்தின் பகுதி .. | வயல் .. | மு. அகம்மதுலெவ்வை, நாவலப்பிட்டிய | 0 0 12·79 |
| 13 | கலேவத்தை, 95 ம், 96 ம் வரி இலக்க வட்டாரத்தின் பகுதி .. | தோட்டம் .. | கதிஜா உம்மாவும், ஏ. ஆர். ஏ. கரீமும், இருவரும் நாவலப்பிட்டி | 0 0 20·57 |
| 14 | அம்புல்கொகுலந்தேஹேன, 93C ம் வரியிலக்க வட்டாரத்தின் பகுதி. | தோட்டம் ... | எம். ஜமால்டீன், நாவலப்பிட்டிய .. | 0 0 20·89 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 5 ம் பிரிவின் (203 ம் அதிகாரம்) ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்களின் எண்ணப்படி சனுதிகார ஆட்சி மந்திராலோசனைச் சபை எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல் அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறுர் என்பதை 6 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ் செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1939 ம் ஹு (டிசெம்பர்) மார்கழிமீ 6 ந் தேதியிலன்று காலை 9 மணிக்கு நாவலப்பிட்டி நகர சங்க ஆபீசில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கண்டிக் கச்சேரி,
1939 ம் ஹு (நவம்பர்) கார்த்திகைமீ 4 ந் உ.

பி. எம். றெணிசன்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

1876 ம் ஹூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் பெரியகிணியாயில் ஒரு ஒழுங்கை மாற்றுகிறதற்கு என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

6 ம கடைசி ரோப்போ படத்தின் அனுபந்தம், 16 ம் இன்செற். குறிச்சி—பெரியகிணியாய்.

| துண்டு. | காணியினது பெயர் | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 2100 | குட்டிக்கரச்சி | ஒழுங்கையும் வெளியாய் விடப்பட்ட தரிசு நிலமும் | பெரிய கிணியாயில் இருக்கும், சின்னத்தம்பி பெண் செய்னம்பு | 0 0 24 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி (அதிகாரம் 203, வொல். 5) காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 5 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்களின் எண்ணப்படி சனாதிகார ஆட்சி மந்திராலோசனைச் சபை எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால் அக் காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 6 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1939 ம் ஹூ (டிசம்பர்) மார்கழி மாசம் 12 ந் தேதியிலன்று காலை 10 மணிக்கு பெரியகிணியாய்க் கிராமக்கோட்டில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

திரிகோணமலைக் கச்சேரி,
1939 ம் ஹூ (நொவெம்பர்) கார்த்திகைமீ 3 ந் உ.

சீ. ஜே. டேன் லேங்றீ,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

**இலங்கை (அரசாங்க சபை தேர்தல்) விஷயமாய் இராச்சிய மந்திர ஆலோசனைச் சபையில் ஏற்பட்ட 1931 ம் ஆண்டின் சட்டம்.**

இல. 1. கொழும்பு வட தேர்தற் பகுதி.

மேற்குறித்த தேர்தற் பகுதிக்குச்சேர்ந்த வாக்காளரின் திருத்தியமைத்த பெயரிடாப்பு பூர்த்தியாக்கப்பட்டிருக்கின்றதென்றும், அவ்விடாப்பு கொழும்பு, பதிவு காரியஸ்த தலைவர் கந்தோரில், கந்தோர் வேலை மணித்தியாலங்களில் பார்வையிடத் தக்கதாய்த் தயாரித்துவைக்கப்பட்டிருக்கிறதென்றும் இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

இலங்கை (அரசாங்க சபைத் தேர்தல்) விஷயமாய் இராச்சிய மந்திர ஆலோசனைச் சபையிலேற்பட்ட 1931 ம் ஆண்டின் சட்டத்துக்கிணங்க, மேற்குறித்த தேர்தற் பகுதிக்குரிய பெயரிடாப்பில் தனது பெயரைப் பதிவிப்பதற்குத் தகைமையுடையோராயிருக்கும் எவரும், அல்லது அவ்விடாப்பிலிருந்து விடப்பட்டு அல்லது நீக்கப்பட்டுள்ள பெயரையுடையவராய் அப்பெயரைப் பதிவிப்பதற்கு உடந்தையுள்ள **எவரும்,** தனது பெயரை இடாப்பிற் பதிவிக்கும் நோக்கமாய் இந்த அறிவித்தல் அரசாட்சியாரின் " கெசற் " பத்திரிகையில் வெளிவந்து இரண்டு கிழமைகளுள் கொழும்பு பதிவு காரியஸ்தர் தலைவர் கந்தோரிலுள்ள பதிவுசெய்யும் உத்தியோகஸ்த (**Registering Officer**) ரிடம் சேரும்படி எழுத்தில் சமர்ப்பித்த கேள்விப்பத்திரமொன்றை ஒப்புவிக்கலாம்—அக்கேள்விப்பத்திரம், இலங்கை (அரசாங்க சபைத் தேர்தல்) விஷயமாய் இராச்சிய மந்திர ஆலோசனைச் சபையிலேற்பட்ட 1935 ம் ஆண்டின் திருத்தச் சட்டத்தால் திருத்தப்பட்ட இலங்கை (அரசாங்க சபைத் தேர்தல்) விஷயமாய் இராச்சிய மந்திர ஆலோசனைச் சபையிலேற்பட்ட சட்டத்தின் இரண்டாம் அட்டவணையில் காண்கிற " **A** " என்ற மாதிரிப்பத்திரப்படியிருப்பதோடு (மாதிரிப்பத்திரப் பிரதிகள் குறித்த பதிவுசெய்யும் உத்தியோகஸ்தரிடம் பெற்றுக்கொள்ளலாம்) கேள்விக்கு ஆதாரமாயிருக்கும் நியாயங்கள் காட்டப்பட்டும். அறிவித்தல்கள் கிடைப்பதற்காக விலாசமொன்று கொடுக்கப்பட்டுமிருத்தல் வேண்டும். ஆனால், 1939 ம் ஆண்டு புரட்டாதிமீ 15 ந் திகதி, அல்லது அதற்குமுன் மேற்குறித்த சட்டத்தின் 14 ம் அம்சத்துக்கிணங்க தானனுப்பிய கேள்விப் பத்திரமொன்று குறித்த பதிவுசெய்யும் உத்தியோகஸ்தரிடம் கிடைத்திருந்தாலன்றி, 8 ம் அல்லது 9 ம் அம்சத்தின்படி தகைமையுடையவர் என்ற நியாயங்கொண்டு தனது பெயரை இடாப்பில் எழுதுவித்துக்கொள்ளும்படி கேட்க எவரும் உரிமையுள்ளவரார்கார்.

மேற்குறித்த தேர்தற் பகுதிக்குரிய இடாப்பில் தனது பெயர் காணப்பெறுபவராய், இன்னொருவரின் பெயர் அல்லது தனது சொந்தப் பெயர் அந்த இடாப்பில் காணப்படுவதையிட்டு ஆக்ஷேபிப்பவரெவரும் அப்பெயரை இடாப்பிலிருந்து நீக்குவிக்கும் நோக்கமாய், இந்த அறிவித்தல் அரசாட்சியாரின் " கெசற் " பத்திரிகையில் வெளிவந்து இரண்டு கிழமைகளுள் கொழும்பு பதிவுகாரியஸ்த தலைவர் கந்தோரிலுள்ள பதிவுசெய்யும் உத்தியோகஸ்தரிடம் சேரும்படி எழுத்தாலாய விண்ணப்பப்பத்திரமொன்றை ஒப்புவிக்கலாம். அவ்விண்ணப்பப்பத்திரம் இலங்கை (அரசாங்க சபைத் தேர்தல்) விஷயமாய் இராச்சிய மந்திர ஆலோசனைச் சபையிலேற்பட்ட 1931 ம் ஆண்டின் சட்டத்தின் இரண்டாம் அட்டவணையில் காண்கிற " **B** " என்ற மாதிரிப்பத்திரப்படியிருப்பதோடு (மாதிரிப்பிரதிகள் குறித்த பவுதிசெய்யும் உத்தியோகஸ்தரிடம் பெற்றுக்கொள்ளலாம்) ஆக்ஷேபனைக்காதாரமான நியாயங்கள் காட்டப்பட்டும், அறிவித்தல்கள் கிடைப்பதற்காக விலாசமொன்று கொடுக்கப்பட்டுமிருத்தல் வேண்டும்.

சீ. ஈ. டி. பிந்து,
கொழும்பு வட, கொழும்பு மத்திய, கொழும்பு தென் தேர்தற் பகுதிகளின் பதிவுசெய்யும் உத்தியோகஸ்தர்.

பதிவுகாரியஸ்தர் தலைவர் கந்தோர்,
கொழும்பு, 1939 ம் ஹூ கார்த்திகைமீ 8 உ.

---

**சுப்றீங் கோட்டு அறிவித்தல்.**

இலங்கைத்தீவிற் சங்கைபோந்த சுப்பிறீங்கோட்டாரது கட்டளையின்படி நாம் பிரசித்தப்படுத்துவதாவது : கண்டி நியாயஸ்தலத்திலே மேற்சொல்லிய சுப்பிறீங் கோட்டாரால் கண்டி டிஸ்திறிக்கைச்சேர்ந்த கிறிமினெல் வழக்கு விசாரணை, 1939 ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 1 ந் திகதியாகிய வெள்ளிக்கிழமை காலமே 11 மணி தொடங்கி அன்றும் அதற்கடுத்த நாட்களிலும் நடத்தப்படும். ஆதலால் அவ்விசாரணையிற் காரியகருமமுள்ளவர்களெல்லோரும் சொல்லப்பட்ட நேரத்திலே சொல்லப்பட்ட இடத்திலே வெளிப்பட்டு அவ்விடத்தினின்றும் உத்தரவின்றி நீங்காதிருக்கக் கடவர்கள்.

இங்ஙனம்,
ஈ. றீ. டைசன்,
மத்திய மாகாண பிஸ்கால்.

கண்டி பிஸ்கால் கந்தோர்,
1939 ம் ஹூ (நொவெம்பர்) கார்த்திகைமீ 1 ந் உ.

PRINTED AT THE CEYLON GOVERNMENT PRESS, COLOMBO.